செய்தி வெளியீடு எண் : 017 நாள் : 03.01.2023

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி புது டெல்லி சாணக்யபுரி கவுடில்யமார்கில் அமைந்துள்ள வைகை தமிழ்நாடு இல்லத்தினை முழுவதுமாக இடித்து விட்டு நவீன வசதிகளுடன் புதிய கட்டடம் கட்டுவது குறித்து ஆய்வு கூட்டம் இன்று (03.01.2023) புது டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் மாண்புமிகு பொதுப்பணி துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு ஏ .கே. எஸ் விஜயன், தமிழ்நாடு அரசின் பொதுப்பணி துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., தமிழ்நாடு இல்ல முதன்மை உள்ளுறை ஆணையாளர் திரு.ஆசிஷ் சாட்டர்ஜி, இ.ஆ.ப., பொதுப்பணித்துறை முதன்மை தலைமை பொறியாளர் இரா விஸ்வநாத் (சென்னை மண்டலம்) திரு. ஆயிரத்தரசு இராஜசேகர், தமிழ்நாடு இல்ல கூடுதல் உள்ளுறை ஆணையாளர், திரு.N.E.சின்னதுரை மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பின்னர் மாண்புமிகு பொதுப்பணி துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில் புது டெல்லி சாணக்யபுரியில் அமைந்துள்ள வைகை தமிழ்நாடு இல்லம் முழுமையாக இடித்துவிட்டு நவீன வசதியுடன் கூடிய புதிய கட்டடம் கட்டுவதற்கு புது டெல்லி நகரமைப்பு ஆணையம், டெல்லி தீத்தடுப்பு துறை, வனத்துறை விமான நிலைய ஆணையம் ஆகிய துறைகளிடமிருந்து தடையில்லா சான்று பெறப்பட்டுள்ளது என்றும் தற்போது பொதுப்பணித்துறையினரால் விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்தனர் மேலும் புதிய கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்த புள்ளிகள் கோரும் பணி விரைவில் தொடங்கப்படும் என்று தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in